**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செய்யூர்</u>**

**<u>DVC. No.4/2025</u>**

**<u>PW-1</u>**

| | | |
|---|---|---|
| பெயர். திருமதி.பவித்ரா | க/பெ.திரு.சூர்யா | நாள் 19.05.2026 |

<u>ம.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி,</u>

நான் எனது கணவர் வீட்டிலிருந்து 27.03.2024 அன்று என்னுடைய தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். என்னுடைய ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையில் தாயார் வீட்டு முகவரி உள்ளதா என்றால் புளியந்தோப்பு முகவரி தான் உள்ளது. ம.சா.ஆ.1 ஆதார் அட்டையில் என்னுடைய தாயார் வீட்டு முகவரி உள்ளது என்றாலும் என்னுடைய தாயார் வீட்டு முகவரியை மறைப்பதற்காக தான் ம.சா.ஆ.1 சரியாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. ம.சா.ஆ.2 என்னுடைய குடும்ப அட்டையில் தாயார் வீட்டு முகவரி தான் உள்ளது என்றால் ஆமாம். என்னுடைய தாயார் வீட்டிற்கு வரும்போது எனது கணவர் வீட்டிலிருந்து வரும் போது என்னுடைய தங்க நகைகள் மற்றும் வெள்ளி நகைகள் எடுத்து வந்தேனா என்றால் கம்மல் ¼ சவரன் தான் போட்டுவந்தேன். நான் என்னுடைய கணவருடன் வாழ்ந்த காலத்தில் மனைவிக்கான எந்தவித சவரட்சணையும் செய்யவில்லை என்றாலும் உணவு கூட சமைக்கவில்லை என்றாலும் கணவருடைய குடும்ப உறுப்பினர்களை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. என்னுடைய மனுவில் 1 முதல் 6 வரையான பரிகாரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்றும் என்னுடைய மனுவை

எதிர்மனுதாரருக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. குழந்தையை என்னுடைய கணவர் பார்க்க வரும்போதெல்லாம் நான் தடுத்தேன் என்றால் அவர் குழந்தையை பார்த்து 3 வருடங்கள் ஆகிறது.

4. கடந்த 2024ம் ஆண்டு 7வது மாதம் என்னுடைய கணவர் என்னுடைய தாயார் வீட்டிற்கு பார்க்க வந்தார் என்றால் வரவில்லை. என்னையும், என் குழந்தையையும் பார்க்க வரும்போது என் கணவரையும், என் கணவரின் குடும்பத்தாரையும் சண்டை போட்டு துரத்திவிட்டேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறுவிசாரணை, இல்லை.

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
DM Cum JM
Cheyyur